## பெப்ரவரி – 03 – சனி

### புனித அன்ஸ்கார்

**உம் வாயினின்று வரும் நீதித்தீர்ப்புகளை எல்லாம் என் இதழால் எடுத்துரைக்கின்றேன்.**
**திபா. 119:13**

## முதல் வாசகம் : 1அரசர் 3 : 4 - 13

ஒருநாள் அரசர் பலி செலுத்துமாறு கிபயோனுக்குச் சென்றார். அங்கேதான் மிக முக்கியமான தொழுகைமேடு இருந்தது. அங்கிருந்த பலிபீடத்தின் மேல்தான் சாலமோன் ஆயிரம் எரிபலிகளைச் செலுத்தியிருந்தார்.அன்றிரவு கிபயோனில் ஆண்டவர் சாலமோனுக்குக் கனவில் தோன்றினார். ”உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்!” என்று கடவுள் கேட்டார்.அதற்குச் சாலமோன், ”உம் அடியாராகிய என் தந்தை தாவீது உமது பார்வையில் உண்மையுடனும் நீதியுடனும் நேரிய உள்ளத்துடனும் நடந்து கொண்டார். அதனால் நீர் அவருக்குப் பேரன்பு காட்டினீர். அந்தப் பேரன்பை அவருக்கு என்றும் காட்டி வந்து, இன்று அவரது அரியணையில் வீற்றிருக்கும் மகனை அவருக்குத் தந்தீர்.என் கடவுளாகிய ஆண்டவரே, நீர் அடியேனை என் தந்தை தாவீதுக்குப் பதிலாக அரசனாக்கியுள்ளீர். நான் செய்வதறியாத சிறு பிள்ளை.இதோ! உமக்கென நீர் தெரிந்து கொண்ட திரளான மக்களிடையே அடியேன் இருக்கிறேன். அவர்கள் எண்ணிக் கணிக்க முடியாத மாபெரும் தொகையினர்.எனவே, உம் மக்களுக்கு நீதி வழங்கவும் நன்மை தீமை பகுத்தறியவும் தேவையான ஞானம் நிறைந்த உள்ளத்தை அடியேனுக்குத் தந்தருளும். இல்லாவிடில், உமக்குரிய இம்மாபெரும் மக்கள் இனத்திற்கு நீதி வழங்க யாரால் இயலும்?” என்று கேட்டார்.சாலமோன் இவ்வாறு கேட்டது ஆண்டவருக்கு உகந்ததாய் இருந்தது.கடவுள் அவரிடம், ”நீடிய ஆயுளையோ, செல்வத் தையோ நீ கேட்கவில்லை. உன் எதிரிகளின் சாவையும் நீ விரும்பவில்லை. மாறாக, நீதி வழங்கத் தேவையான ஞானத்தை மட்டுமே கேட்டிருக்கிறாய்.இதோ! நான் இப்பொழுது நீ கேட்டபடியே செய்கிறேன். உனக்கு நிகராக, உனக்கு முன்னே எவரும் இருந்ததில்லை. உனக்குப் பின்னே இருக்கப் போவதுமில்லை.அந்த அளவுக்கு ஞானமும் பகுத்தறிவும் நிறைந்த உள்ளத்தை உனக்கு வழங்குகிறேன். இன்னும் நீ கேளாத செல்வத்தையும் புகழையும் உனக்குத் தருவேன். ஆகையால் உன் வாழ்நாள் முழுவதிலும் உனக்கு இணையான அரசன் எவனும் இரான்.

**பதில்பாடல்:** ஆண்டவரே! எனக்கு உம் விதி முறைகளைக் கற்பித்தருளும்.

## நற்செய்தி : மாற்கு 6 : 30 – 34

அக்காலத்தில் திருத்தூதர்கள் இயேசுவிடம் வந்துகூடித் தாங்கள் செய்தவை, கற்பித்தவையெல்லாம் அவருக்குத் தெரிவித்தார்கள். அவர் அவர்களிடம், நீங்கள் பாலைநிலத்திலுள்ள தனிமையான ஓர் இடத்திற்குச் சென்று சற்று ஓய்வெடுங்கள்” என்றார். ஏனெனில் பலர் வருவதும் போவதுமாய் இருந்ததால், உண்பதற்குக்கூட அவர்களுக்கு நேரம் கிடைக்கவில்லை.அவ்வாறே அவர்கள் படகேறிப் பாலைநிலத்தில் உள்ள தனிமையான ஓர் இடத்திற்குச் சென்றார்கள்.அவர்கள் புறப்பட்டுப் போவதை மக்கள் பார்த்தார்கள். பலர் அவர்களை இன்னாரென்று தெரிந்து கொண்டு, எல்லா நகர்களிலிருந்தும் கால்நடையாகவே கூட்டமாய் ஓடி, அவர்களுக்குமுன் அங்கு வந்து சேர்ந்தனர்.அவர் கரையில் இறங்கியபோது பெருந்திரளான மக்களைக் கண்டார். அவர்கள் ஆயரில்லா ஆடுகளைப்போல் இருந்ததால் அவர்கள் மீது பரிவு கொண்டு, அவர்களுக்குப் பலவற்றைக் கற்பித்தார்.

**தியானம்:** இன்றைய வாசகங்களைப் பார்ப்போமேயானால் எமக்கு ஏதாவது தேவையென்றால் அதை எந்த வகையில் பெற்றுக்கொள்ள முடியுமோ அதை நாம் நல்லது, கெட்டது பார்க்காமல் ஏதோவொரு வகையில் பெற்றுக்கொள்ள முனைந்து விடுகின்றோம். மற்றவர்கள் குடும்பத்துக்கு கூடாத செயலாக இருந்தாலும் கூடப் பரவாயில்லை எனது தேவை சந்திக்கப்பட வேண்டும் என்று செயற்பட்டு, பாவத்திற்கு அடிமைப்பட்டு இறையன்பிலிருந்து விலகி விடுகின்றோம். இன்றைய முதல் வாசகத்திலும் எரோபவாம் அரசு தாவீதின் வீட்டிற்கே திரும்பிச் சென்றுவிடும் என்று சிந்தித்து, இஸ்ராயேல் மக்களை தன்வயப்படுத்த பொன்னாலான இரு கன்றுக் குட்டிகளைச் செய்து, எகிப்து நாட்டிலிருந்து மீட்டுவந்த தெய்வம் என்று கூறி, பலகுருக்களையும் ஏற்படுத்தி வழிபட வைத்தான். ஆனால் இவ்வாறான பலவகை தீய செயற்பாடுகளால் அவனது வீடு பாவத்திற்கு உள்ளாகி இறுதியில் மண்ணில் மடிந்தொழிவதற்கு காரணமாயிருந்தது. (1அரச.13:34). இன்று நாங்களும் மற்றவர்களின் வாழ்க்கை எவ்வாறு போனாலும் பரவாயில்லை நானும், என் குடும்பமும் நல்லாயிருந்தால் போதும் என்றும், இருக்கும் மட்டும் அனைத்திலும் இன்பங்கண்டு தீயசெயல் என்றும் தெரிந்தும் மீண்டும் மீண்டும் பாவவாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நமது கடவுள் தீர்ப்பிடும் கடவுள் அல்ல, மாறாக மன்னிக்கின்ற கடவுள். நாங்கள் மனம்மாற எமக்கு பல சந்தர்ப்பங்களை கொடுப்பார்., ஆனால் மனமாறவில்லையென்றால் எமக்கும் அழிவு நிற்சயம். எனவே நாங்கள் செய்யும் வழிபாடுகள் உண்மை வழிபாடாகவும், எமது வாழ்வு உண்மை வாழ்வாகவும் இருக்க எம் ஒவ்வொருவருடைய வாழ்வையும் மாற்றியமைப்போம்.